DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC.No. 434/2025
Prosecution witness – P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.கார்த்திக்ராஜா** | Caste: | |
| Father's Name | : நெடுஞ்செழியன் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

15.07.2026 – 01.05 AM
1 ம் எதிரி ஆஜரில்லை. 2 ம் எதிரி வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.
முதல் விசாரணை

1. நான் இராமநாதபுரம் ஆயுதப்படையில் 3 ம் படைப்பிரிவில் இரண்டாம் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். 2025 ம் வருடம் ஒரு நாள் காலை 06.30 மணியளவில் அபிராமம் காவல் நிலைய குற்ற எண்.71/2018 வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளான அஜித் என்கிற விக்னேஸ்வரன், மணிவண்ணன் ஆகியோர்களை மதுரை மத்திய சிறையில் இருந்து கமுதி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவேண்டி கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டு நானும், காவலர் 1079- செந்தில்குமார் (அ.சா.1), காவலர் 551- திருநாவுக்கரசு, காவலர் 768- இராமச்சந்திரன் மற்றும் சார்பு ஆய்வாளர் ஹேமப்பிரியா ஆகியோருடன் TN-65-G-0970 என்ற பதிவெண் கொண்ட ஈச்சர் வாகனத்தை காவலர் 2138- சுரேஷ்குமார் என்பவர் ஓட்டி வர காலை 10.30 மணியளவில் மதுரை மத்திய சிறைக்கு சென்று அங்கிருந்து மேற்படி எதிரிகளை அழைத்துக்கொண்டு கமுதி நீதிமன்றத்திற்கு பகல் 01.00 மணியளவில் வந்தடைந்தோம்.

2. நீதிமன்ற வளாகத்தில் காத்திருந்த போது பகல் 01.00 மணியளவில் 1ம் எதிரி அஜித் என்பவரிடம் ஒரு நபர் ஒரு துண்டுச்சீட்டை கொடுத்ததாக கூறி செந்தில்குமார் என்றும் காவலர் 1ம் எதிரிடம் சென்று கேட்டார். அப்போது அ.சா.1யை பார்த்து 1ம் எதிரி நான் அப்படிதாண்டா கொடுப்பேன்டா உன்னால என்ன பன்ன முடியும், வெளியே வந்தா உன்னை கொலை பண்ணிடுவேன் என்று தரக்குறைவாக பேசினார். பிறகு நாங்களும், நீதிமன்ற வளாகத்தில்

இருந்த பொதுமக்களும் 1ம் எதிரியை சமாதமானப்படுத்தி அவரை வாய்தாவிற்கு முன்னிலைப்படுத்தி பிறகு நீதிமன்றத்திலிருந்து மறு வாய்தா தேதி உத்தரவு கிடைத்தவுடன் எதிரிகளை மீண்டும் வாகனத்தில் ஏற்றி மதுரை மத்திய சிறையில் ஒப்படைத்து விட்டு சென்றுவிட்டோம். இது சம்மந்தமாக செந்தில்குமார் கமுதி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார் .

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1. சம்பவம் நடந்த அன்றைய தினமே இரவு 09.00 மணியளவில் கமுதி சார்பு ஆய்வாளர் என்னை நிலையத்தில் வைத்து விசாரித்தார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தபோது வழிக்காவலுக்கு சென்ற அனைத்து போலீசாரும் அங்கு இருந்தோம். செந்தில்குமார்என்னும் காவலர் அன்றைய தினம் இரவு 08.00 மணியளவில் புகார் அளித்தார். அவர் புகார் அளித்தபோது நாங்கள் அனைவரும் சென்றோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற அன்றைய தினத்தில் வழிக்காவலுக்காக இராமநாதபுரம் மாவட்ட சிறைக்கு பணிக்கு சென்றேன். என்னை கமுதி சார்பு ஆய்வாளர் சம்பவத்திற்கு மறுநாள் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.அவ்வாறு மறுநாள் விசாரணை செய்ததாக ஆவணங்கள் இருந்தால் அது தவறு என்றால் சரிதான். மதுரை மத்திய சிறைக்கு சம்பவத்தன்று காலை 11.00 மணியளவில் சென்றோம். நீதிமன்றத்திற்கு மதியம் 01.00 மணியளவில் வந்தோம்.

2. இதற்கிடையே வாகனத்தை எங்கும் நிறுத்தவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிகளை தவிர்த்து வேறு யாரையும் வழிக்காவல் செய்து அழைத்து வரவில்லை என்றால் சரிதான். பிரச்சனை நடந்ததாக சொல்லப்படுகிற சமயத்தில் சுமார் 30 லிருந்து 40 பொதுமக்கள் இருந்தார்கள். அவர்களும் எதிரிகளை சமாதானப்படுத்தியதாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தபோது கூறினேன். பொதுவாக சிறையில் இருந்து ஒரு கைது வழிக்காவல் செய்து அனுப்பி வைக்கப்படும் போது அவருக்கு தேவையாண உணவு மற்றும் குடிநீர் சிறையில் இருந்து வழங்கப்படும் என்றால் சரிதான் மேற்படி எதிரிகளுக்கு

உணவு மற்றும் குடிநீர் வழங்கப்பட்டதா என்றால் அவர்களிடம் கேட்டபோது அவர்கள் வேண்டாம் என்று தெரிவித்தார்கள். எதிரிகளை எப்போது சிறையில் ஒப்படைத்தோம் என்றால் மாலை 06.00 மணியளவில் ஒப்படைத்தோம்.

3. எதிரிகள் அன்றைய தினம் காலை 11.00 மணியளவில் மத்திய சிறையில் இருந்து வெளியே வந்து நீதிமன்றத்திற்கு வாய்தாவிற்கு முன்னிலையாகி மீண்டும் மாலை 06.00 மணியளவில் அவர்களை ஒப்படைக்கும் வரை அவர்களுக்கு உணவு மற்றும் குடிநீர் வழங்கப்படவில்லை என்றால் எனக்கு சரியாக அது பற்றி தெரியவில்லை. பொதுவாக வழிக்காவல் எதிரிகள் பிரச்சனை செய்தால் அது குறித்து உயரதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கை பொறுத்தவரை யாருக்கு தகவல் அளிக்கப்பட்டது என்றால் தெரியவில்லை. அ.சா1 நீதிமன்ற சாட்சியத்தில் நான் பிரச்சனையை சமாதானம் செய்ய முயலவில்லை என்று கூறியிருந்தால் அதுபொய் என்றால் சரிதான். புகாரை கமுதி சார்பு ஆய்வாளர் எழுதினார். எதிரிகளை மதுரை மத்திய சிறையில் ஒப்படைத்து விட்டு அங்கிருந்து ஈச்சர் வாகனத்தில் கமுதி காவல் நிலையத்திற்கு வந்து புகார் அளித்தோம். எதிரிகளுக்கு உணவு மற்றும் தண்ணீர் கொடுக்காததால் அவர்கள் எங்களிடம் பசியால் சாப்பாடு வேண்டும் என்று கேட்டதற்கு நாங்கள் தான் எதிரிகளை மிரட்டினோம் என்றாலும், அதற்கு எதிரிகள் எங்களை நீதிமன்றத்தில் கூறிவிடுவதாக சொன்னதால் எதிரிகள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் அதை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.07.15 18:52:21 +0530